காலை முரசு
பக்கங்கள்:-23
முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 26 | ஞாயிற்றுக்கிழமை | 10.05.2026 | அதிர்வு 2823

## தமிழக முதல்வராக விஜய் இன்று காலை பதவியேற்பு!



(விரிவான செய்தி 19 ஆம் பக்கத்தில்)



# யாழ்.போதனா தீ விபத்து: மீட்சிப் பணிகள் தீவிரம்!

## 9 பாரவூர்திகளில் மருந்துகளை ஏற்றிவரத் துரித ஏற்பாடு நோயாளர் சேவைகள் பாதிக்கப்படாது என்று அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியசாலையில் இடம்பெற்ற தீ விபத்தால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் வகையில், உடனடியாக 9 பாரவூர்திகளில் அத்தியாவசிய மருந்துகளைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

06

# எயார்பஸ் மோசடியில் மஹிந்தவுக்கு அழைப்பாணை செவ்வாயன்று நேரில் முன்னிலையாகுமாறு உத்தரவு

## 'கார்ல்டன்' இல்லத்தில் நேற்று கையளிக்கப்பட்டது கடிதம் கபிலவின் மர்ம மரணத்தின் மறுநாளே வந்தது நெருக்கடி



எயார்பஸ் விமானக் கொள்வனவு மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆஜராகுமாறு இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவை மே 12 ஆம் திகதியன்று ஆணைக்குழுவில் முன்னிலையாகி

06




அவர் ஓய்வு பெற்ற அதிகாரி. நீண்ட நாள்களாக எனக்கு அவரைத் தெரியும். அவரின் பதவி நிலையைக் குறிப்பிடாமல் தவிர்க்கிறேன். தம்மை முன்னிலைப்படுத்தாமல், ஆளுந்தாரப்போடு ஒட்டியும், ஒட்டாமலும், முரண்படாமலும் தம் வேலை உண்டு, தம் கடமை உண்டு என்று இருந்தவர் என்பதால் எந்தச் சிக்கலும் இல்லாமல் ஓய்வு வரைச் சமாளித்து விட்டார். ஆயினும் அதிகார தரப்பின் விடயங்களை அதிகம் எப்போதும் அறிந்தவராக, தெரிந்தவராக இருப்பார். ஆனாலும் தெரிந்தவற்றைக் காவித் திரிந்து, அல்லது கசிய விட்டு அல்லது போட்டுக் கொடுத்துத் தனக்குத் தானே சூனியம் வைப்பவர் அல்லர்.

சில தினங்களுக்கு முன்னர் தொலைபேசி அழைப்பு எடுத்துப் பேசினார்.

"உங்களை எனக்கு நீண்ட நாள்களாகத் தெரியும். யுத்த நெருக்கடிக்கு மத்தியில் நீங்கள் ஊடகப் பணியை முன்னெடுத்தமையைப் பார்த்திருக்கிறேன். நீங்கள் எதிர்கொண்ட அளவுக்கு அச்சுறுத்தல் போன்ற நெருக்கடிகளை

06



# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு: 262 என்புத் தொகுதிகள் அடையாளம்

## மூன்றாம் கட்ட அகழ்வின் முதற்பகுதி நிறைவு ஜூன் முதலாம் திகதி இரண்டாம் பகுதி ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,செம்மணிமனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் முதலாம் பகுதி நேற்று நிறைவடைந்தது. 12 நாள்கள் இடம்பெற்ற இந்த ஆய்வின் முடிவில், இதுவரை மொத்தம் 262 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அகழ்வாய்வின் 12 ஆவது நாளான நேற்று, ஒரு புதிய என்புத் தொகுதி அடையாளம் காணப்பட்டது. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தொகுதிகளில் இருந்து ஐந்து என்புத் தொகுதிகள் நேற்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இதுவரை செம்மணியிலிருந்து 261 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

ஒன்று அடையாளம் காணப்பட்ட நிலையில், இன்னும் வெளியே எடுக்கப்படாமல் உள்ளது.

இதில் சிறுவர்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் என்புத் தொகுதிகளும் அடங்குவது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய அகழ்வின் போது என்புக் குவியல்களுக்குக் கீழே இரும்பு வளையம் எனச் சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்று கண்டறியப்பட்டது. அதற்கு அடியிலும் என்புத் தொகுதிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதால், அப்பகுதி மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட ஆய்வின் போது இதுவரை 15 முக்கிய சான்றுப் பொருட்கள் மீட்கப்பட்டு, நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

நாணயக்குற்றிகள், மூக்குத்திபோன்ற ஆபரணம், சிதைவடைந்த நிலையில் காப்புத் துண்டு மற்றும் சிவப்பு நிற நூல் உள்ளிட்ட பொருட்கள் 82 முதல் 97 வரையிலான இலக்கமிடப்பட்டு சான்றுகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் முதலாம் பகுதி நேற்றோடு முடிவுக்கு வந்துள்ள நிலையில், மூன்று வார இடைவேளைக்குப் பிறகு, எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி இரண்டாம் பகுதி அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் இந்த அகழ்வு முடிவுகளை மிகுந்த எதிர்பார்ப்புடன் கவனித்து வருகின்றனர்.









# இலங்கை - வியட்நாம் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவடையும்

## கொழும்பில் உயர்மட்டச் சந்திப்பு

இலங்கை மற்றும் வியட்நாம் நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புகளைமேம்படுத்துவதுதொடர்பான முக்கிய கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துய்யகொந்தா மற்றும் வியட்நாமின் துணைப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் பான் வான் ஜியாங் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு வியட்நாம் அரசு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காக பாதுகாப்பு செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் பொதுவான பாதுகாப்பு நலன்கள் சார்ந்த விடயங்களில் இலங்கையின் பாதுகாப்புத் துறையுடன் இணைந்து பணியாற்ற வியட்நாம் உறுதி பூண்டுள்ளது என்று ஜெனரல் ஜியாங் இதன்போது தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்களுக்கு வாழ்த்துத் தெரிவித்த வியட்நாம் தூதுக்குழுவினர், பிராந்தியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்கத் தயார் என்று மீண்டும் வலியுறுத்தினர்.

இந்தச் சந்திப்பில் வியட்நாம் தரப்பில் அந்நாட்டின் வெளிநாட்டு உறவுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லெப்டினன்ட் ஜெனரல் வு தான் வான் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளும், இலங்கை தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் மற்றும் இராணுவ இணைப்பு அதிகாரி உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பிராந்திய ரீதியில் பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர ரீதியான ஒரு பலமான கூட்டாண்மையை உருவாக்குவதற்கு இந்தச் சந்திப்பு ஒரு முக்கிய அடித்தளமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# கபில சந்திரசேனவின் மரண மர்மம் விலகுமா? பிரேத பரிசோதனை அறிக்கை நாளை நீதிமன்றில்

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை, நாளை திங்கட்கிழமை கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கோட்டை நீதிவானின் உத்தரவுக்கு அமைவாக, கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி ஸ்ரீயந்த அமரரத்ன தலைமையிலான ஐவர் கொண்ட விசேட மருத்துவக் குழுவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் பிரேத பரிசோதனையை முன்னெடுத்தனர். கொழும்பு சட்ட வைத்திய மற்றும் நச்சு ஆய்வியல் நிலையத்தில் நடைபெற்ற இந்தச் சோதனையின் முடிவுகள், மரண விசாரணைக்கான முக்கிய நிபுணத்துவ சான்றாக அமையவுள்ளது.




கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகள், கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடமிருந்து உடனடியாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு மாற்றப்பட்டுள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க லொக்குஹெட்டியின் நேரடி மேற்பார்வையில் விசேட குழுவொன்று இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சர்ச்சைக்குரிய எயார்பஸ் விமானக் கொள்வனவு ஊழல் வழக்கு தொடர்பாக 54 நாள்கள் விளக்கமறியலில் இருந்து பிணையில் வந்திருந்த கபில சந்திரசேனவை, மீண்டும் கைது செய்யுமாறு கடந்த 7ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, கடந்த 8ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) காலை கொள்ளுப்பிட்டி பேதரிஸ் மாவத்தையில் உள்ள முன்னாள் கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வாவின் வீட்டில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு இந்த வழக்கில் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ள சூழலில், கபில சந்திரசேனவின்மரணபரிசோதனைஅறிக்கை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.







# ஐரோப்பிய ஒன்றிய சிறப்புப் பிரதிநிதியுடன் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர சந்திப்பு

(ஞான பிரசாந்தன்)

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான ஐரோப்பிய ஒன்றிய சிறப்புப் பிரதிநிதி மரியா காஸ்டிலோ பெர்னாண்டஸ், வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் கௌரவ அருண் ஹேமச்சந்திரவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற 04 வது ஐரோப்பிய ஒன்றிய இந்தோ-பசிபிக் அமைச்சரவை மன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பு அமைந்திருந்தது.

இதன்போது, இந்தியப் பெருங்கடல் மற்றும் இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் இலங்கையின் மூலோபாய முக்கியத்துவம், உலகளாவிய தொடர்புகள், வர்த்தகம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் விரிவாக ஆராய்ந்தனர்.

குறிப்பாக கடல்சார் பாதுகாப்பு மற்றும் சர்வதேச கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பதில் ருஊேடுழுளு உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தியதோடு, CRIMARIO மற்றும் IORIS போன்ற பிராந்திய செயற்திட்டங்களில் இலங்கையின் ஈடுபாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், எரிசக்தி பாதுகாப்பு மற்றும் உலகளாவிய இணைப்புகளைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து கருத்துப் பரிமாறப்பட்டதுடன், மத்திய கிழக்கின் தற்போதைய சூழல் எரிசக்தி, வர்த்தகம், சுற்றுலா மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பசுமை எரிசக்தி மற்றும் பல்வேறு இணைப்புத் திட்டங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் முதலீடுகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இதன்போது சுட்டிக்காட்டிய விசேட பிரதிநிதி, உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் கூட்டாண்மைகளை பல்வகைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

அதேவேளை, புதிய விதிமுறைகளின் கீழ் இலங்கை மீண்டும் GSP+ வரிச்சலுகைத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னதாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் (PTA) மேற்கொள்ளப்பட்டு வரும் திருத்தங்களின் தற்போதைய நிலைப்பாட்டை பிரதி அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் அவர் இதன்போது மீள உறுதிப்படுத்தினார்.

மே 09 ஆம் திகதி கொண்டாடப்படும் ஐரோப்பா தினத்தை முன்னிட்டு, விசேட பிரதிநிதிக்கும் அவரது தூதுக் குழுவினருக்கும் பிரதி அமைச்சர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மோரேனோ, கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.













# வேலும்மயிலும் பவுண்டேசனில் கல்வி கற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வேலும்மயிலும் பவுண்டேசனில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்து சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

ஓடக்கரை வீதி, பருத்தித்துறையில் உள்ள வேலும்மயிலும் பவுண்டேசன் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்ற நிகழ்வில் ஆங்கிலம், கணிணி, சிங்களம் ஆகிய கற்கை நெறிகள் மற்றும் தையல் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்து பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

வேலும்மயிலும் பவுண்டேசன் தலைமை நிர்வாக அதிகாரி ரி.சிவகுமாரசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதனும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பூ.தவநாதன், கட்டைவேலி, பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை போதகர் கிரேஸ் செபமாணி, ஞானாலயம் இயக்குநர் யோகா ஆசான் மா.இரத்தினசோதி ஆகியோர் பங்கேற்று கருத்துரைகளை வழங்கியதுடன், மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், நினைவு பரிசுகளையும் வழங்கி வைத்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது ஆங்கிலம், கணிணி, சிங்களம் ஆகிய கற்கை நெறிகள், தையல் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்து பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து ஆங்கிலம், கணிணி கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் என 74 மாணவர்களுக்கு 108 சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டிருந்தன.

முன்னதாக விருந்தினர்கள் மாலை அணிவித்து பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். மங்கல விளக்கேற்றப்பட்டு வேலும்மயிலும் பவுண்டேசன் மாணவர்களது வரவேற்பு நடனம் இடம் பெற்றது. தொடர்ந்து நடனம், குழு நடனம், குழு பாடல் நிகவுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வேலும்மயிலும் பவுண்டேசன் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.
































# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிற பத்திரிகையாளர்கள் பலரும் எதிர்கொண்டிருக்க மாட்டார்கள். பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடிய விருது என்று நினைக்கிறேன், உங்களுக்கு யுத்தம் முடிந்த கையோடு பத்திரிகை ஆசிரியர்கள் வழங்கினார்கள் என்று எனக்கு நினைவு" – என்றார் அவர்.

ஏன் இந்தப் பீடிகை எல்லாம் என்று கேட்டேன்.

காரணத்துடன்தான் என்று அவர் சொன்ன தகவல் சற்று மனக் கலகத்தைத் தராமல் இருக்கவில்லை.

“உயிரச்சுத்தறுல்கள், நெருக்கடிகள் போன்றவற்றை நீங்கள் தாண்டி விட்டீர்கள். ஆனால் இப்போது ஊடகத்துறைக்குப் புதுவிதமான ஓர் அதிகார அச்சுறுத்தல் வந்திருப்பதாக அறிகிறேன். அதுவும் தமிழ் ஊடகத்துறை தொடர்பாக” – என்றார் அவர்.

நான் சற்று சீரியஸாக செவி மடுக்கத் தொடங்கினேன்.

“முக்கிய இரண்டு ஊடகத்துறையின் நிர்வாகிகள் அல்லது முதலாளிகள் அதிகார தரப்பினரிடம் வசமாக மாட்டிக் கொண்டு உள்ளார்கள். ஒருவர் நீண்ட காலம் தமது நிறுவன வற்வரி அற வீட்டை அரசுக்குச் செலுத்தாமல் சூறையாடி ஸ்வாகா பண்ணி வந்தமையை முழு விவரங்களோடு கண்டுபிடித்து விட்டார்கள் என்று அறிகிறேன். நீங்களும் நானும் எதிர்பார்க்காத – நம்ப முடியாத – பெருந் தொகையைக் கட்ட வேண்டிய இக்கட்டில் அவர் மாட்டியிருக்கிறார். அதில் ஐந்து ஒரு பகுதியை முதல் தடவையாக செலுத்தி மிகுதியை பிறகு பார்க்கலாம் என்று கெஞ்சிக் கூத்தாடி சமாளித்திருக்கிறார் எனத் தெரிகிறது. இன நல்லிணக்கத்திற்காக என்ற பெயரில் ஆளும்தரப்பினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ‘தமிழ்த் தேசியம்’, ‘உரிமை’ என்று வரிந்து கட்டிக் கொண்டு நின்று குழப்பக் கூடாது என்ற ‘அன்பு கட்டளையுடன்’ அவருக்கு பெருந்தொகை கட்டணம் செலுத்தாமல் சகாயம் செய்யப்பட்டிருப்பதாகத் தகவல். அந்த முதலாளியை வழி நடத்தி, தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் விதத்தில் விடயத்தைக் கையாளும் பொறுப்பு ஆளும் தரப்பின் வடக்கு எம்.பி. ஒருவரிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊடக அடக்குமுறை எந்த வடிவத்தில் என்று புரிந்து கொள்ளுங்கள்.” – என்றார்.

“இன்னொரு முதலாளியும் இதே போன்று முன்னைய அரசுடனான நிதிக் கொடுக்கல் வாங்கலில் மாட்டியிருக்கிறார். அவரைப் பொறுத்தவரை அவரும் இறங்கி, சமாளித்து, ஆளுந்தரப்பின் பெயரை ரிப்பேராக்காமல் சமரசமாகப் போவார் என்றே நான் எதிர்பார்க்கிறேன். அதனால் அவருக்குச் சிக்கல் வராது. ஆனாலும் அவரது ஊடக வர்த்தகத்தில் வியாபாரப் போட்டியாளர்களுக்கு இடம் அளிக்கப்பட போகின்றது என்று கூறப்படுகின்றது.” – என்றும் அவர் சொன்னார்.

“வடக்கில் அகலக் கால் பரப்பியிருப்பவர் எனக் காட்டிக் கொள்ளும் இன்னொரு ஊடக முதலாளி பற்றியும் ஆழ ஊடுருவி அலசுகின்றார்கள் என்று கேள்வி. வரும் வாரங்களில் அல்லது மாதங்களில் அவரது செயற்பாடு தொடர்பில் ஒரு சிறு துரும்பு ஏதேனும் மாட்டினால் அதனையும் ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்குவது போல பண்ணி அவருக்கும் தொல்லை கொடுத்து அவரது ஊடகங்களையும் வழிக்குக் கொண்டு வந்து விடுவார்கள் எனத் தெரிகிறது. அவரும் நைந்து இடம் கொடுத்து சமாளித்துப் போவார் என்று நம்புகிறேன்.

“அடுத்த கட்டம் உங்களைப் போன்ற தரப்புகள் மீது பாயும். முன்னர் உயிரச்சுறுத்தல் என்ற அடக்கு முறையைச் சமாளித்தீர்கள். இனி சட்டரீதியான பெயரில் அடக்கு முறை பாயப் போகின்றது. கவனமாக இருங்கள்” – என்றார் அந்த முன்னாள் அதிகாரி.

“மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம்? எங்கள் பக்கத்தில் நீங்கள் குறிப்பிடுவது போன்ற சிக்கல எதுவும் இல்லையே? நான் ஊடக முதலாளியும் இல்லையே..?” – என்றேன் நான்.

“நீங்கள் மடியில் கனமில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் மடியிலேயே உங்களுக்குத் தெரியாமல் கனத்தை வைப்பார்கள் அவர்கள்” – என்று எச்சரித்தார் அந்தப் பிரமுகர்.

எனக்கு சந்தேகம் வந்துவிட்டது. “நீங்கள் எனக்கு அட்வைஸ் பண்ணுகிறீர்களா அல்லது அன்பு கலந்த முன்னெச்சரிக்கை என்ற பெயரில் அச்சுறுத்தல் தருகின்றீர்களா?” – என்று நேரடியாகவே கேட்டேன்.

“ஐய்யய்யோ அப்படிக் கருதாதீர்கள். ஆளும் பக்கத்துத் தகவல் அவ்வப்போது எனக்குக் கிடைக்கும். அவ்வளவுதான். எனக்கும் அவர்களுக்கும் பெரிய தொடுசல் ஏதும் இல்லை. உள் வீட்டுத் தகவல் பற்றிக் கேள்விப்பட்டேன். நல்லெண்ணத்தில் உங்களை அலேர்ட் பண்ணத்தான் இவற்றைச் சொன்னேன். நினைத்தால் உங்கள் பையில் இருந்து போதைப் பொருள் பக்கெட் எடுத்தோம் என்று கூறி கூட உங்களை சந்தேக நபராக்க முடியும். அதிகாரம் கையில் இருந்தால் எதுவும் செய்யலாம். ஊடகங்களை நேரடியாக கட்டுப்படுத்தாமல் ஊடக நிர்வாகிகள் மீது வேறு வழியிலான அழுத்தங்களை கொடுத்து வழிக்கு வரப் பண்ண முடியும் என்ற தத்துவம் கட்டவிழ்வதாகத் தெரிகிறது.

“உயிர் அச்சுறுத்தல் கால ஊடக அடக்கு முறையை வெற்றிகரமாக எதிர்கொண்ட நீங்கள் இத்தகைய அடக்கு முறையை எப்படி சமாளிக்க போகின்றீர்கள் என்பது விரைவில் உங்கள் போன்றோரின் அனுபவமாக வெளிப்படும் என நினைக்கிறேன்” – என்றும் அவர் கூறினார்.

நம் அரசியல் தலைவர்கள் பலரே அரசாங்கத்தின் பணய கைதிகள் போல நடக்கின்ற இக்கட்டில் இருக்கும்போது ஊடகவியலாளர்கள் இத்தகைய அச்சுறுத்தலுக்கு எவ்வாறு தாக்குப் பிடிப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது.

முடிந்தவரை உறுதியாக நிற்போம் என்பதை தவிர வேறு எதுவும் கூற முடியாத சிக்கல்தான்.

யுத்த காலத்தில் இருந்தது போன்றதல்லாமல் வேறு ஒரு விதமான ஊடக அடக்குமுறை சூழ்ந்து வருவதை உய்த்துணரக்கூடியதாக இருக்கின்றது. பார்ப்போம் எப்படி எதிர் கொள்ளப் போகின்றோம் என்பதை...!

# எயார்பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்குமூலம் வழங்குமாறு கோரும் உத்தியோகபூர்வ கடிதம், நேற்று சனிக்கிழமைஅவரதுதங்காலை“கார்ல்டன்” இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்தவாரமேமுன்னாள்ஜனாதிபதிக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என்று ஊடகங்களில் செய்திகள் கசிந்திருந்தாலும், நேற்று சனிக்கிழமைதான் உத்தியோகபூர்வ கடிதம் அவருக்குக் கிடைத்துள்ளது.

குறிப்பாக, எயார்பஸ் வழக்கின் பிரதான சாட்சியாளராகக் கருதப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன மர்மமான முறையில் உயிரிழந்து அடுத்த நாள் இந்த அழைப்பாணை கடிதம் வந்துள்ளது.

கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பாக ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் எதிர்த்தரப்பினர் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி வரும் நிலையில், நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஒருவரை இலஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழு விசாரணைக்குஅழைத்துள்ளமைமுக்கியஇராஜதந்திர நகர்வாகப் பார்க்கப்படுகின்றது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மஹிந்த ராஜபக்ஷ ஆணைக்குழுவில் முன்னிலையாவாரா அல்லது அவரது தரப்பில் கால அவகாசம் கோரப்படுமா என்பது குறித்த எதிர்பார்ப்பு நாடு முழுவதும் அதிகரித்துள்ளது.

# யாழ்.போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தால் மருந்துகள் அழிவடைந்த போதிலும், வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுக்கான எந்தவொரு சேவையும் பாதிக்கப்படாது என்று பணிப்பாளர் உறுதியளித்தார்.

மருத்துவ சேவைகளைத் தடையின்றித் தொடர்வதற்கான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து 3 பாரவூர்திகள் கொழும்பு நோக்கிப் பயணமாகி மருந்துகளை ஏற்றிவரவுள்ளன.

அதேவேளை, கொழும்பிலுள்ள மத்திய மருந்தகக் களஞ்சியத்திலிருந்து 5 பாரவூர்திகளில் மருந்துகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அனுராதபுரம் வைத்தியசாலையிலிருந்து ஒரு பாரவூர்தி மூலம் அவசர மருந்து விநியோகம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மொத்தம் 9 பாரவூர்திகளில் தேவையான அனைத்து வகை மருந்துகளும் எதிர்வரும் 4 நாள்களுக்குள் யாழ். போதனா வைத்தியசாலையை வந்தடையும்என்றுபணிப்பாளர்.சத்தியமூர்த்தி மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்தத் தீ விபத்துக்கான உண்மையான காரணம் 07▶

# ஜனாதிபதிக்கு மேல் ஒரு 'பூஜ்ஜிய பிரஜை'

## பெலவத்தையில் இருந்து உத்தரவுகள் பிறப்பிப்பு என்று கம்மன்பில சாடல்



"நாட்டின் முதலாம் பிரஜையான ஜனாதிபதிக்கு மேல், பெலவத்தையில் ஒரு "பூஜ்ஜிய பிரஜை" இருந்து கொண்டு உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றார்" என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

திறைசேரி அதிகாரி ரங்க ராஜபக்ஷவின் மரணம் தொடர்பாக, நேற்று சனிக்கிழமை குளியாப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரங்க ராஜபக்ஷவின் மரணம் சந்தேகத்துக்குரியது என அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளதாகத் தான் குறிப்பிட்ட கருத்து, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ கடிதத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கம்மன்பில விளக்கமளித்தார்.

"மரண பரிசோதனைக் குழுவை நியமிக்கும் கடிதத்தில், "மனைவி முறைப்பாடு செய்துள்ளார்" என ஆங்கிலத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு ஆங்கிலம் விளங்கும், ஆனால் பெலவத்தையில் இருக்கும் அந்த பூஜ்ஜிய பிரஜைக்குத்தான் ஆங்கிலம் விளங்கவில்லை" என்றும் அவர் சாடினார்.

பிரேத பரிசோதனை அறிக்கையைத் தான் ஏற்காததற்கான ஐந்து காரணங்களை பொலிஸாரிடம் முன்வைத்துள்ளதாகத் தெரிவித்த அவர், ஒரு மரணம் குறித்துச் சந்தேகம் எழுப்ப மனைவிக்கு மட்டுமே உரிமை உண்டு என்பதில்லை, நாட்டின் எந்தவொரு குடிமகனுக்கும் அந்த உரிமை உண்டு என்றும் சுட்டிக்காட்டினார்.

"கபில சந்திரசேன இறப்பதற்கு முன்னர், இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தன்னைத் தூக்கிலிடுமாறு அச்சுறுத்தியதாகத் தனது சத்தியக் கடதாசியில் குறிப்பிட்டுள்ளார். குளியாப்பிட்டிய பொலிஸார் அவ்வாறு நடந்துகொள்ளாமல் இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு தங்களை அலைக்கழித்து சோர்ந்து போகச் செய்ய முயற்சிப்பதாகவும், ஆனால் இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு அஞ்சித் தனது அரசியல் பயணத்தை நிறுத்தப் போவதில்லை என்றும் உதய கம்மன்பில இதன்போது சூளுரைத்தார்.

## யாழ்.போதனா...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

என்ன? மற்றும் இதனால் ஏற்பட்டுள்ள நிதி ரீதியான இழப்பு எவ்வளவு? என்பது குறித்து ஆராய்வதற்காக மத்திய சுகாதார அமைச்சிலிருந்து விசேட விசாரணைக் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையைச் சமாளிக்க மத்திய சுகாதார அமைச்சு மற்றும் பிராந்திய வைத்தியசாலைகள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புகையிலையற்ற தலைமுறை

புகையிலைப் பயன்பாட்டினால் உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 8 கோடி மக்கள் உயிரிழக்கின்றனர். இலங்கையில் புகையிலை மற்றும் மதுவினால் ஏற்படும் வருடாந்திர இறப்பு எண்ணிக்கை ஏறத்தாழ 22,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தைக் கையாள்வதற்கு உலகம் புதிய யுக்தி ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது. அதனை ஒரு திட்டமாக இலங்கையும்மேற்கொள்ளவிழைகின்றது. அந்த வகையில் இலங்கை தனது பொது சுகாதாரப் பயணத்தில் ஒரு தீர்க்கமான தருணத்தில் நிற்கின்றது என்று குறிப்பிடலாம்.

புகையிலை மற்றும் மது மீதான தேசிய அதிகார சபையால் இது தொடர்பில் ஒரு கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. ‘புகையிலை அற்ற தலைமுறை’ என்ற அந்த முன்மொழிவு தேசிய கவனிப்பைப் பெற்றிருக்கின்றது.

2010 க்குப் பிறகு பிறந்தவர்களுக்கு புகையிலைப் பொருள்கள் கிடைப்பதை சட்ட ரீதியாகத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது இந்தத் திட்டம். சாராம்சத்தில் போதை பழக்க சுழற்சிக்குள் ஒரு தலைமுறை சிக்க முன்னரே அதை முளையிலேயே கிள்ளி, முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு நீண்டகால அர்ப்பணிப்பு யோசனை இது. இந்தத் திட்டம் வெற்றி பெறுமா என்பதுதான் கேள்வி.

புகைப்பிடிக்கும் பழக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் புகையிலை மீது அதிக வரி விதிப்பு, பொது விழிப்புணர்வுப் பிரசாரங்கள், விளம்பரரீதியிலானகட்டுப்பாடுகள் என்று பல மட்டுப்படுத்தல்கள் ஏற்கனவே இருக்கின்ற போதிலும், அவை போதுமான பயனைத் தரவில்லை என்பதுதான் பெறு பேறாக இருந்து வருகிறது.

அந்தப் பின்புலத்தில்தான் இலங்கையிலும் அடுத்த தலைமுறைக்கு புகையிலேயே நெருங்காத ஒரு சூழ்நிலையை சட்டத்தின் மூலம் உருவாக்குவது பற்றி சிந்திக்கப்படுகின்றது.

புகையிலைப் பாவனையாளர்களிடமிருந்து அரசு வரி விதிப்பு மூலம் பெரும் தொகை நிதியை வருமானமாக ஈட்டிக் கொண்டாலும், மறுவளத்தில் புகையிலை பாவனையால் - பாதிப்பால் - ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு அதிலும் விட பல மடங்கு நிதியை சுகாதார மருத்துவத் துறைகளுக்கு அரசு செலவிட வேண்டி இருக்கின்றது.

அந்த வகையில் பார்த்தால், அடுத்த தலைமுறைக்கு புகையிலை மீது தடை விதிப்பது அரசுக்கு உடனடி வருமான இழப்பைத் தந்தாலும், சுகாதார - மருத்துவத்துறை செலவினங்கள் குறைவதன் மூலம் எதிர்காலத்தில் அது நிதியியல் ரீதியிலும் அரசுக்கும் நாட்டுக்கும் பயனாக மாறும் என்பதும் கவனிக்கத்தக்கது. அதே சமயம் ஆரோக்கியமான சமூகமும் உருவாகும்.

ஆயினும் உத்தேசத் திட்டத்திற்கு எதிராக புகையிலை நிறுவனங்களிடம் இருந்து வரக்கூடிய எதிர்ப்புகள், அரச வருவாய் இழப்பு, கள்ளச் சந்தை, உடனடி நடைமுறையாக்கத்தின் போது பாவனையாளர்களின் வயதை உறுதிப்படுத்துவதற்கான சோதனைகள், விற்பனையைக் கண்காணிப்பது போன்ற பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. இப்படி ஒரு தலைமுறைக்கு திகதி குறிப்பிட்டு தடைவிதிப்பது தனிமனித சுதந்திரத் தலையீடு என்ற சிக்கலையும் உருவாக்கலாம்.

இவற்றையெல்லாம் தாண்டி இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் தான் அடுத்த தலைமுறையாவது புகையிலைப் பெருங்கொடூரத்திலிருந்து மீள வழி கிடைக்கும்.




# உலக செஞ்சிலுவை தினத்தை ஒட்டி யாழ்ப்பாணத்தில் மரநடுகை நிகழ்வு!

உலக செஞ்சிலுவை தினத்தை சிறப்பிக்கும் முகமாக, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையினரால் நேற்றைய தினம் விசேட மரநடுகை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 8 ஆம் திகதி உலக செஞ்சிலுவை தினமாக உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், சூழல் பாதுகாப்பை வலியுறுத்தியும், இந்நாளை நினைவுகூர்ந்தும் யாழ்ப்பாணத்தில் இந்த மரநடுகை செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளைத் தலைமை அலுவலக வளாகத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளைத் தலைவர் ச.திரவியராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், யாழ் கிளை இளைஞர் அணித் தலைவர் பூ.லின்ரன் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள், யாழ் கிளை இளைஞர் அணியினர் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

மனிதாபிமானப் பணிகளில் முன்னிற்கும் செஞ்சிலுவைச் சங்கம், இன்றைய உலகளாவிய காலநிலை மாற்றத்தைக் கருத்திற்கொண்டு இவ்வாறான பசுமைத் திட்டங்களை முன்னெடுப்பது பாராட்டுக்குரியது என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்










# விசுவமடுவில் ஆசிரியரின் மோ. சைக்கிளை திருடியவர் சி.சி.ரி.வி. கமராவில் சிக்கினார்




(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளுவர்புரம், விசுவமடு (றெட்பானா) பகுதியில் ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 7.50 மணியளவில் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வரிமாறு:-

வீட்டு வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் திருடிச் செல்லும் காட்சி, வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் உரியவர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட நபர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொது மக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தை பாவிப்போருக்குக் கட்டணம் அதிகரிப்பு

நடப்பாண்டில் இரண்டாம் காலாண்டிற்கான விசேட மின்சாரக் கட்டணத் திருத்தம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பால் மின் உற்பத்திக்கான செலவு உயர்ந்துள்ளமையை அடிப்படையாகக் கொண்டு, 'நஷனல் சிஸ்டம் ஓப்பரேட்டர்' நிறுவனம் சமர்ப்பித்த திருத்தப்பட்ட மதிப்பீடுகளுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் கே.பி.எல். சந்திரலால், குறைந்த மின்சாரத்தை நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தத் திருத்தம் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அதன்படி, 180 அலகுகளுக்குக் குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் சாதாரண நுகர்வோருக்கு



எவ்வித கட்டண அதிகரிப்பும் ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு சுமார் 18 சதவீதம் வரை கட்டண அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

புதிய மதிப்பீடுகளின் அடிப்படையில், 180 முதல் 210 அலகுகள் வரை பயன்படுத்துவோருக்கு 1,760 ரூபாவும், 210 முதல் 240 அலகுகள் வரை பயன்படுத்துவோருக்கு 2,210 ரூபாவும் மேலதிகக்கட்டணமாக அறவிடப்படவுள்ளது. அத்துடன் 270 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கு 2,600 ரூபாவும், 300 அலகுகளுக்கு மேல் பயன்படுத்துவோருக்கு 3,110 ரூபாவும் மேலதிகக் கட்டணமாக விதிக்கப்படவுள்ளமையோடு, நுகர்வோர் பயன்படுத்தும் மேலதிக அலகுகளைப் பொறுத்து இத்தொகையில் மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

மின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ள நிலையில், மின்சார சபையின் நிதிச் சமநிலையைப் பேணுவதற்காக இந்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட தலைவர், அதேவேளை தரமற்ற நிலக்கரியினால் ஏற்படும் நட்டங்களை மின்சாரக் கட்டணத்தில் சேர்த்து பொதுமக்களிடம் வசூலிக்கப் போவதில்லை என ஆணைக்குழு உறுதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான பொதுமக்களின் வாய்மூலக் கருத்துத் தெரிவிக்கும் சந்தர்ப்பங்கள் அண்மையில் நிறைவடைந்த நிலையிலேயே இந்த இறுதி அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நலிவுற்றோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதயமானது தமிழ் தேசிய மறுமலர்ச்சி நிதியம்

(பா.சதீசன்)

தமிழ்த் தேசிய மறுமலர்ச்சி நிதியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

"தமிழ் தேசிய மறுமலர்ச்சி நிதியம" எனும் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிதியம், வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழும் நலிவடைந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.






























# வடமாகாண சுதேசமருத்துவத் திணைக்கள அலுவலகத்தை விரைவாக மாங்குளத்தில் அமைக்க ரவிகரன் வலியுறுத்து!

**(விஜயரத்தினம் சரவணன்)**

வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள அலுவலகத்தை, வடக்கு மாகாணத்தின் மையப்புள்ளியான மாங்குளத்தில் அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள அலுவலக கட்டடம் மாங்குளத்தில் அமைக்கப்படு மென வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் சர்வானந் தன் பதிலளித்துள்ளார்.

அத்தோடு மாங்குளத்தில் வடமா காண சுதேச மருத்துவத் திணைக்களம் அமையப்பெறவுள்ள அந்த 02ஏக்கர் காணிக்கு சுற்றுவேலி அமைப்பதற்கும், நுழைவாயில் அமைப்பதற்கும், பெயர்ப் பலகை அமைப்பதற்கும் இவ்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வட மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர், நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரனிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த 04.11.2025 அன்று இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவிரித்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடமாகாண சுதேசமருத்துவத் திணைக்கள அலுவலகம் வடமாகாணத் தின் மையப்பகுதியான மாங்குளத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் வலியுறுத்தப்பட்டதுடன், மீறி வேறு இடங்களில் குறித்த அலு வலகத்தை அமைக்க நடவடிக்கை எடுத் தால் வீதியில் இறங்கி போராடவேண்டிய நிலை ஏற்படுமெனவும் அவரால் எச்ச ரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

அத்தோடு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள அலுவலகம் அமைப்பதற்குரிய திட்ட முன்மொழி வுகளை உரியவகையில் சமர்ப்பித்து, நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொண்டு கூடிய விரைவில் மாங்குளத்தில் வடமா காண சுதேச மருத்துவத் திணைக்களக் கட்டடத்தை அமைக்குமாறும் இதன் போது அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் 2026ஆம் ஆண்டு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக் கள அலுவலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமெனச் சொல்லப் படுவதாக இதன்போது வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணை யாளர் சர்வானந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்தார்.

அத்தோடு கட்டாயமாக 2026ஆம் ஆண்டில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள அலுவலகத்திற்கான புதிய கட்டடம் அமைக்கப்படுமெனவும், மாகாணத்தின் மையப்பகுதியில் அந்தக் கட்டடம் அமைக்கப்படவேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருக்கின்றார் எனவும் இதன்போது வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசனும் நாடாளுமன்ற உறுப்பிர் ரவிகரனிடம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களக் கட்டடம் மாங்குளத்தில் அமைக்கப்படுவதற்குரிய நிதி ஒதுக்கீட்டு தொடர்பில் கடந்த 29.04.2026ஆம் திகதியன்று இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவி ருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தில் நாடாளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதன்போது வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் சர்வானந்தன் பதிலளிக்கையில் –

கடந்த 04.11.2025அன்று மன்னார் மாவட்ட அபிவிருத்தி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதற்கு அமைவாக, இந்த விடயம் தொடர்பில் முழுமையான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக ஆளுநர் தலைமையிலான கூட்டங்களில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியமையுடன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளருடனும் கலந்துரையாடினோம்.

அந்தக் கலந்துரையாடல்களைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேசசெய லகத்துடன் தொடர்புகொண்டு, மாங் குளத்தில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் அமையவுள்ள இந்தக் காணியின் நில அளவை வரைபடம் மற்றும் காணி உறுதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்றுள்ளோம்.

இந்நிலையில் இந்த ஆண்டு குறித்த வடமாகாண சுதேச மருத்துவத் திணைக் களத்தின் அலுவலக கட்டடம் அமைப் பதற்கு நிதி ஒதுக்கீடு போதாமலுள்ளது.

இருப்பினும் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு இந்த வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களக் கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

எனினும் பிரதம செயலாளருடன் கலந்துரையாடி, முதற்கட்டமாக இவ் வாண்டில் மாங்குளத்திலுள்ள அந்த 02ஏக்கர் காணிக்கு சுற்றுவேலி அமைப்பதற்கும், நுழைவாயில் அமைப் பதற்கும், பெயர்ப்பலகை அமைப்பதற் குமான செயற்பாட்டை மேற்கொள்ள வுள்ளோம் – என்றார்.

இந்நிலையில் 2027ஆம் ஆண்டி லும் இதேபோல் பதிலளிக்காமல், மாங் குளத்தில் குறித்த சுதேச மருத்துவத் திணைக்கள கட்டடத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ரவிகரன் தொடர்ந்தும் வலியுறுத்தினார்.

கட்டாயமாக 2027ஆம் ஆண்டில் மாங்குளத்தில் வடமாகாண சுதேசமருத் துவத் திணைக்களக் கட்டடம் அமைக் கப்படுமென இதன்போது வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணை யாளர் சர்வானந்தன் தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# சுரேஷ் சலேவுக்கும் கூட அதே கதிதானா? "தற்கொலைகள்" குறித்து விமல் கேள்வி!

நாட்டின் தற்போதைய மர்ம மரணங்கள் மற்றும் அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக மக்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அந்த வகையில் தற்போதைய சூழலில் சுரேஷ் சலே போன்ற புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஒருவர் வெளியில் வந்தால் அவரின் பாதுகாப்பு எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுகிறது. சட்டமும் நீதியும் நேர்மையாக நிலைநாட்டப்படாத பின்னணியில் அரசாங்கம் தனது பொறுப்பிலிருந்து முற்றிலும் தவறியுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கடுமையாகக் குற்றம் சாட்டினார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மர்ம மரணம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சட்டமும் நீதியும் சரியாக, நேர்மையான முறையில் நிலைநாட்டப்பட்டால் எவரும் இத்தகைய விபரீத முடிவுகளை எடுக்க எண்ணுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட உடனேயே எவரும் தற்கொலை செய்துகொள்ள முயல்வதில்லை.

முதலில் நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளரின் மரணம் உண்மையாகவே தற்கொலையா இல்லையா என்ற பாரிய சந்தேகம் சமூகத்தில் எழுந்துள்ளது. அத்தோடு, தற்போதைய சம்பவத்தைப் பார்க்கும்போதும், அது மேலோட்டமாக தற்கொலை போன்று தெரிந்தாலும் அதிலும் பல்வேறு சந்தேகங்கள் காணப்படுகின்றன.

பொதுவாக ஒரு அரசாங்கம் என்பது நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். மாறாக, அரசாங்கத்தின் செயல்பாடுகளால் மக்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்படக்கூடாது. இந்த விடயத்தில் அரசாங்கம் தனது பொறுப்பைச் சரியாக நிறைவேற்றவில்லை. இது மிகவும் தீவிரமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதுதான் இறுதித் தற்கொலையா அல்லது இறுதிக் கொலையா என்பதை எம்மால் கூற முடியாது.

இந்த அரசாங்கம் தனது அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மட்டுமே செயல்பட்டு வருகிறது. இதனால் நாட்டு மக்கள் மிகவும் பாதுகாப்பற்ற, மன உளைச்சலுக்கு ஆளான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறானதொரு பின்னணியில், சுரேஷ் சலே போன்ற புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஒருவர் வெளியில் வந்தால் அவரின் பாதுகாப்பு எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுகிறது.

அவரின் உயிருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுகிறது என்பதையே இந்தச் சம்பவங்கள் காட்டுகின்றன. ஒருவேளை அவருக்கு பிணை கிடைத்தாலும் கூட, அடுத்து என்ன நடக்கும் என்ற அச்சமும் சந்தேகமும் எழுவதைத் தடுக்க முடியாது.

அடுத்ததாக, விசாரணை ஆணைக் குழுவின் விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்தும் போது, எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் இந்த ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறார்கள். நான் தனிப்பட்ட முறையில் அங்கு சாட்சியமளிக்கச் செல்வதா இல்லையா என்பது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

இவர்கள் யாரை சிறையிலடைக்க வேண்டும் என்ற பட்டியலை வைத்துக் கொண்டு அதை மட்டுமே வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். – என்றார்.

# லஞ்சம் வாங்கும் போது கைதான குருநாகல் பிரதிமேயர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து இடைநீக்கம்

குருநாகல் மாநகர சபையின் ஒப்பந்த செயல்முறை தொடர்பான விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டு இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட குருநாகல் மாநகர சபையின் பிரதி மேயர் அஸாருடீன் மெய்னுடீனின் கட்சி உறுப்புரிமை உடன் அமுலுக்குவரும் வகையில் இடைநீக்கம் செய்யப்படுவதாக கட்சியின் சட்டவிவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி ருஷ்டி ஹபீப் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஊழலுக்கும் சட்டத்தின் ஆட்சியை பாதிக்கும் எந்தவொரு நடத்தைக்கும் எதிராக உறுதியான மற்றும் சமரசமற்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. பொது நம்பிக்கையை சீர்குலைக்கும் அல்லது நாம் நிலைநிறுத்தும் நேர்மை மற்றும் பொறுப்புணர்வு கொள்கைகளுக்கு அவமரியாதை ஏற்படுத்தும் எந்தச் செயலையும் கட்சி அனுமதிப்பதில்லை. நடைபெற்று வரும் விசாரணைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெறக்கூடிய சட்ட நடவடிக்கைகள் நிறைவடையும் வரை இந்த இடைநீக்கம் அமுலில் இருக்கும். சட்டம் எந்தத் தலையீடும் இன்றி தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதில் கட்சி நம்பிக்கை கொள்கிறது. மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கட்சி முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் என எதிர்பார்க்கிறது.

குறிப்பிடப்பட்ட நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் முற்றிலும் அவருடைய தனிப்பட்ட செயல்களாகும் அவை கட்சியின் கொள்கைகள், விழுமியங்கள் அல்லது அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை பிரதிபலிப்பவை அல்ல என்பதை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

இந்த விவகாரத்தின் முன்னேற்றங்களை கட்சி தொடர்ந்து கவனித்து வருவதுடன், தனது யாப்பு மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகளும் ஏற்படுத்திய விதிமுறைகளுக்கு அமைவாக தேவையான மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்." – எனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் அநுராதபுரம் அட்டமஸ்தான தலைமை தேரர் கைது

அநுராதபுரம் அட்டமஸ்தானத்தின் தலைமை தேரரான பல்லேகம ஹேம ரத்ன தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்லேகம ஹேமரத்ன தேரர் கைது செய்யப்பட்டமை தொடர்பான காரணம் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்றுத் தெரிவித்திருந்தார்.

சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிர யோகம் செய்தார் என பல்லேகம ஹேம ரத்ன தேரர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான உண்மைகளை தேசிய சிறுவர் பாது காப்பு அதிகாரசபை நேற்று அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்தது.

இதன்போது, சந்தேக நபரான தேரர் மற்றும் குறித்த சிறுமியின் தாய் ஆகி யோரைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

அநுராதபுரம் தலைமை நீதிவான் சியபத் சசிந்து விக்கிரமரத்ன, சந்தேக நபரான தேரருக்கு வெளிநாட்டுப் பய ணத் தடையையும் விதித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தனியார் வைத்தி யசாலை ஒன்றின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த போதே தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இது வரை பல்லேகம ஹேமரத்ன தேரர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட் டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகி றது.





# வவுனியா தவசியாகுளம் அ.த.க. பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடைபவனி

(கி.வசந்தன்)

125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா தவசியாகுளம் அ.த.க பாடசாலையின் நடை பவனி ஒன்று நேற்று இடம்பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர்க ளின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்தில் இருந்து பாடசாலை வரை இந்த நடை பவனி இடம்பெற் றது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பழமையான பாடசாலையான தவசியா குளம் அ.த.க. பாடசாலை கடந்து வந்த பாதைகளையும், சாதனைகளையும் வெளிப்படுத்தும் வகையில் இந்தச் நடைபவனி இடம்பெற்றிருந்தது.

பாடசாலயின் பழைய மாணவியான 78 வயது மூதாட்டி முதல் பல்வேறு துறைகளிலும் தற்போது கடமையாற்றும் பழைய மாணவ மாணவிகள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இந்த நடை பவனியில் கலந்து கொண்டு பாடசாலை யின் சிறப்பை வெளிப்படுத்தி இருந்த னர்.





# இளம் குடும்பஸ்தர் கடத்தி தாக்கப்பட்டமை; 3 ஓட்டோச் சாரதிகள் வவுனியாவில் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் கடத்தி தாக்கப்பட்டமை தொடர்பில் ஓட் டோச் சாரதிகள் மூவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என வவுனியா பொலி ஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, புதிய பஸ் நிலையத்தில் பஸ் ஒன்றில் இருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை ஓட்டோ வில் கடத்தப்பட்டு, புதிய பஸ் நிலை யத்திற்கும், சோயா வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வயல் நிலப் பகுதியில் மூன்று மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டி ருந்தார்.

இந்தச் சம்பவத்தின் போது அவரிடம் இருந்து கடிதம் ஒன்றில் கையொப்பம் பெறப்பட்டிருந்தமையுடன், அவரது தொலைபேசியில் இருந்த ஆவணங் களும் அழிக்கப்பட்டன எனப் பாதிக் கப்பட்ட குடும்பஸ்தர் வவுனியா பொலி ஸில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்த வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் இந்தக் கடத்தல் மற்றும் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகஓட்டோச் சாரதிகள் மூவரைக் கைது செய்துள்ளமையுடன், மேலதிக விசாரணைகளின் பின் அவர் களை நீதிமன்றில் முற்படுத்த நட வடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரி வித்தனர்.





## அவுஸ்திரேலியாவில் தமிழ் கலாசாரத்தின் குரல்:

# ‘கூத்தாடி’ திரைப்பட குழுவை நேரில் அழைத்து கௌரவித்தார் ஆஷ் அம்பிகைப்பாகர் எம்.பி.

(ஞான பிரசாந்தன்)

அவுஸ்திரேலிய மண்ணில் தமிழ் கலை மற்றும் பண்பாட்டு அடையாளங்களை உலகத்தரத்திற்கு கொண்டு செல்லும் முயற்சியில் ஒரு வரலாற்று மைல்கல் எட்டப்பட்டுள்ளது.

தமிழ் திரைப்பட சங்கம் அவுஸ்திரேலியா (TFAA) Inc. அமைப்பினர், அவுஸ்திரேலியமத்தியஅரசின்செல்வாக்குமிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷ் அம்பிகைப்பாகரை கான்பெராவில் உள்ள நாடாளுமன்றத்தில் நேரில் சந்தித்து ஆலோனை நடத்தினர்.

பாரம்பரியமும் நவீனமும் இணைந்த இந்த சந்திப்பு வெறும் மரியாதை நிமித்தமானது மட்டுமல்லாமல், தமிழ் சினிமாவின் கலைப்படைப்பான “கூத்தாடி” திரைப்படத்தின் மூலம் தமிழ் பாரம்பரிய கிராமியக் கலைகளை சர்வதேச அளவில் எவ்வாறு நிலைநிறுத்துவது என்பது குறித்த காத்திரமான உரையாடலாக அமைந்தது.

சந்திப்பின் சிறப்பம்சமாக, வகுயுயு சார்பில் இரவீ ஆனந்தராசா, “திரு” மற்றும் திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் நடிகருமான செல்வின் தாஸ் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, கலை உலகின் மீதான தனது பற்றை வெளிப்படுத்தும் விதமாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷ் அம்பிகைப்பாகர் , “கூத்தாடி” திரைப்படத்தின் நாயகனும் தயாரிப்பாளருமான செல்வின் தாஸ்´க்கு பொன்னாடை அணிவித்து, ஒரு கலைஞனாக அவர் ஆற்றிவரும் மகத்தான சேவையைப் பாராட்டி வியப்படைந்தார்.

இந்த சந்திப்பின் போது ஆஷ் அம்பிகைப்பாகர் ஆற்றிய உரையில், எம்முடைய வேர்களைத் தேடிச் செல்லும் ஒரு படைப்பாக “கூத்தாடி” உருவெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், அழியும் நிலையில் உள்ள கிராமிய கூத்துக் கலைகளையும், நாடக மரபுகளையும் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் பிள்ளைகளிடம் கொண்டு சேர்ப்பது காலத்தின் கட்டாயம் என்றும் இந்த உன்னத முயற்சியை மேற்கொண்ட செல்வின் தாஸ் மற்றும் TFAA அமைப்பிற்கு தனது முழுமையான ஆதரவு எப்போதும் உண்டு என்றும் அவர் உறுதியளித்தார்.

அவுஸ்திரேலிய தமிழ் சமூகத்தின் கலாசாரத் தூதுவராகச் செயல்படும் ஆஷ் அம்பிகைப்பாகரின் இந்த அர்ப்பணிப்பை, அந்நாட்டு தமிழ் மக்கள் நெகிழ்ச்சியுடன் பாராட்டி வருகின்றனர்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பானது, “கூத்தாடி” திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை அவுஸ்திரேலியா மற்றும் தாயகத் தமிழர்களிடையே பல மடங்கு அதிகரித்துள்ளதுடன், உலக அரங்கில் தமிழ் கலைகளுக்கான ஒரு புதிய அங்கீகாரமாகவும் பார்க்கப்படுகிறது.















# பயன்பாடற்று இருக்கும் பருத்தித்துறை மீன்சந்தை குளிரூட்டல் அறை குறித்து விசேட கலந்துரையாடல்

பருத்தித்துறை மீன் சந்தையில் அமைக்கப்பட்டு நீண்டகாலமாக பயன்படுத்தப்படாதுள்ள குளிரூட்டல் அறை தொடர்பில் பருத்தித்துறை நகரசபையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள நகரசபைக்கு சொந்தமான பொது மீன் சந்தை வளாகத்தில் மீன்களை பதனிட்டு பாதுகாப்பாக வைக்கும் வகையில் குளிரூட்டல் அறை ஒன்று அமைப்பதற்கு நகரசபை செயலாளர் திருமதி தாரணி கஜரூபனினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சுமார் ஏழு மில்லியன் ரூபா செலவில் கடந்த 2023 ஆம் ஆண்டு இறுதியில் அமைக்கப்பட்டிருந்த குறித்த குளிரூட்டல் அறை இதுவரை பயன்படுத்தப்படாது இருந்து வருகிறது.

இந்நிலையில் அதனை இயங்கு நிலைக்கு கொண்டுவருவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் முகமாக மீன்சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் மீன் வியாபாரிகளுடன் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது.

இதன்போது மேற்படி குளிரூட்டல் அறையை பயன்படுத்துவது தொடர்பில் மீன் வியாபாரிகளது தேவைப்பாடு மற்றும் கருத்துகள் கேட்டறியப்பட்டது. மற்றும் மீன் சந்தையில் உள்ள குறைபாடுகள் தொடர்பிலும் மீன் வியாபாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஏனைய விடயங்கள் ஆலோசிக்கப்பட்டு குளிரூட்டல் அறையை பயன்படுத்துவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நகரபிதாவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கலந்துரையாடலில் நகரபிதா வி.டக்ளஸ் போல், உப தவிசாளர் தே.தேவராஜேந்திரன், நகரசபை செயலாளர் ச.பிரசாத், நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், மீன் வியாபாரிகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.














# தமிழக முதல்வராக விஜய் இன்று காலை பதவியேற்பு!

ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை எண்ணிக்கையுடன் ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை, தவெக தலைவர் விஜய் நேற்று சனிக்கிழமை மாலை சந்தித்தமையை அடுத்து, ஆளுநர் அவரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை அடுத்து இன்று காலை 10 மணிக்கு சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் விஜய் முதல்வராக பதவியேற்பது உறுதியாகியுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில், விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களில் வெற்றி பெற்றது. இதில், விஜய் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றதால் ஒரு தொகுதியை இராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. இதன் காரணமாக த.வெ.கவின் எண்ணிக்கை 107 ஆக குறையும். ஆட்சி அமைக்க 118 எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை தேவை எனும் நிலையில், காங்கிரஸ், சி.பி.ஐ, சி.பி.எம், வி.சி.க, ஐயு.எம்.எல் ஆகிய கட்சிகளின் ஆதரவைக் கேட்டு விஜய் கடிதம் எழுதி இருந்தார்.

அதன் பேரில், முதல் கட்சியாக காங்கிரஸ் தனது ஆதரவை அறிவித்தது. காங்கிரஸ் கட்சிக்கு 5 எம்.எல்.ஏக்கள் உள்ளதால், த.வெ.க தலைமையிலான கூட்டணியின் பலம் 112 ஆக அதிகரித்தது.

இந்நிலையில், சி.பி.ஐ. மற்றும் சி.பி.எம். கட்சிகள் நேற்று முன்தினம் தங்கள் ஆதரவை அறிவித்தன. அந்த இரு கட்சிகளுக்கும் தலா 2 எம்.எல். ஏக்கள் உள்ளதால், பலம் 116 ஆக உயர்ந்தது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று மாலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் தங்கள் ஆதரவை அறிவித்தன. இவ்விரு கட்சிகளுக்கும் தலா 2 எம்.எல்.ஏக்கள் உள்ளமையால் பலம் 120 ஆக அதிகரித்தது. இதன் காரணமாக த.வெ.க. பெரும்பான்மை பலத்தை பெற்றது.

இதையடுத்து, ஆளுநரைச் சந்திக்க விஜய் தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நேற்று இரவு 7.20 மணிக்கு விமானம் மூலம் கேரளா செல்ல திட்டமிட்டிருந்த ஆளுநர் அர்லேகர், விஜய் ஆட்சி அமைப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தனது பயணத்தை ரத்து செய்தார். மேலும், மாலை 6.30 மணி அளவில் சந்திக்க விஜய்க்கு அவர் நேரம் ஒதுக்கினார்.

இதன் பின்னர், ஆளுநரை நேரில் சந்தித்த விஜய், பெரும்பான்மை பலம் இருப்பதற்கான கடிதங்களை நேரில் வழங்கி ஆட்சி அமைக்க உரிமை கோரினார். விஜய் உடன் கூட்டணி கட்சித் தலைவர்களான காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சி.பி.எம் மாநில செயலாளர் சண்முகம், சி.பி.எம். மூத்த தலைவர் கே.பாலகிருஷ்ணன், சி.பி. எம் எம்.பி. சு.வெங்கடேசன், வி.சி.க. எம்.எல்.ஏ. வன்னி அரசு உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

விஜய்க்கு பெரும்பான்மை பலம் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்ட ஆளுநர், அவரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார். இதையடுத்து இன்று காலை 10 மணியளவில் விஜய் பதவியேற்பது உறுதியானது. சென்னை நேரு விளையாட்டரங்கில் பதவியேற்பு விழா நடைபெற உள்ளது.

தாமதத்துக்கான காரணம் குறித்து ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

“சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளில் வெற்றிபெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த த.வெ.க, அதன் அடிப்படையில் ஆட்சி அமைக்க உரிமை கோரி இருந்தால் ஆளுநர் அப்போதே அதற்கு சம்மதம் தெரிவித்திருப்பார்.

விஜய்யும் உடனடியாக முதல்வர் பதவியை ஏற்றிருப்பார். ஆனால், கூட்டணி ஆட்சி அமைக்க இருப்பதாகவும் காங்கிரஸ் கட்சியின் 5 எம்.எல்.ஏக்கள் ஆதரவு தங்களுக்கு இருப்பதாகவும் கூறி விஜய் தனது முதல் கடிதத்தை ஆளுநரிடம் வழங்கினார்.

கூட்டணி ஆட்சி என கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததால், போதிய பெரும்பான்மை இல்லாததை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

போதிய பெரும்பான்மையுடன் வந்தால் உடனடியாக ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பதாகவும் அவர் கூறினார்.

பெரும்பான்மையை திரட்டுவதில் விஜய்க்கு ஏற்பட்ட தாமதம் காரணமாக, ஆளுநர் அழைப்பு விடுக்காமல் இருந்தார். நேற்று பெரும்பான்மை கிடைத்ததை அடுத்து ஆளுநர் விஜய்க்கு ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார்.” என தெரிவித்தன.

# புதிய அரசுக்கு மீண்டும் எனது நல்வாழ்த்துகள்

## தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தெரிவிப்பு



"மகளிர், இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள், விளிம்புநிலை மக்கள், அரசு ஊழியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்துத் திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்தினால் மாநிலம் வளரும். இதனைக் கவனத்தில் கொண்டு புதிய அரசு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைய இருக்கும் புதிய அரசுக்கு மீண்டும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

– இவ்வாறு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில்,

"தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு, நடக்கும் நிகழ்வுகளை நீங்கள் பார்க்கிறீர்கள். எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக்காத வகையில் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன.

ஆட்சி அமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மை இடங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி பெறவில்லை என்றாலும், குறிப்பிடத்தக்க வாக்குகளை நாம் பெற்றுள்ளோம்.

நான் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில், புதிய ஆட்சி அமைவதற்கு இடையூறாக இருக்க மாட்டோம் என்றும், ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக தி.மு.க. செயல்படும் என்றும் சொல்லியிருந்தேன். அதன்பின், என் தலைமையில் நடந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், முடிவெடுக்கும் பொறுப்பை எனக்குக் கொடுத்தார்கள்.

அந்தக் கூட்டத்தில், "கட்சியின் நலனை மனதில் வைத்து, தலைமைக் கழக நிர்வாகிகளுடன் கலந்து பேசி முடிவெடுப்பேன்" எனத் தெரிவித்தேன்.

ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை யாருக்கும் கிடைக்காத நிலையில், மாற்று யோசனைகளைப் பலரும் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை, தோழமைக் கட்சிகள் எந்த முடிவை எடுத்தாலும் அவர்களின் முடிவை மதித்து ஒருங்கிணைந்து செயல்பட்டு, நிலையான ஆட்சி அமைய வேண்டும் இன்னொரு தேர்தலுக்கு வழிவகுத்துவிடக் கூடாது என்பதே எனது எண்ணமாக இருந்தது.

எங்களது கூட்டணியைச் சார்ந்த தோழர்கள், "இன்றைய நெருக்கடியான சிக்கலைத் தவிர்க்க, நாங்கள் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்தாலும், கொள்கை அடிப்படையில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்கிறோம்" என்று அறிவித்திருந்தமையை நான் வரவேற்கிறேன்.

கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் நன்றி தெரிவிக்க அண்ணா அறிவாலயம் வரவில்லை. ஒரே நாளில் திமுகவுடனான உறவை முறித்துக்கொண்டு காங்கிரஸ் கட்சி சென்றது.

அதேசமயம் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் தொடர்ந்து தி.மு.கவுடன் கைகோத்துப் போராடுவோம் என்று கொம்யூனிஸ்ட் தலைவர்கள் தோழர் சண்முகம், தோழர் வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் அறிவித்தமை தோழமை உணர்வை வெளிப்படுத்தியுள்ளது, கொள்கையில் வலுவாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது.

இந்நேரத்தில் மிக முக்கியமான சோதனைக் காலத்தில் உறுதியுடன் உடன் நின்ற தோழமை இயக்கத் தலைவர்கள் பேராசிரியர் அய்யா காதர் மொகிதீன், அண்ணன் வைகோ, சகோதரி பிரேமலதா விஜயகாந்த், பேராசிரியர் ஜவாஹிருல்லா, சகோதரர்கள் ஈஸ்வரன், தமிமுன் அன்சாரி உள்ளிட்ட அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்களின் உறுதிக்கு எத்தகைய நன்றியும் பாராட்டும் பொருந்தும். கடந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் வளர்த்தெடுத்து, தமிழ்நாட்டை வளப்படுத்தியிருக்கிறோம். ஏராளமான திட்டங்களின் மூலமாக ஒவ்வொரு தனிமனிதரும் நன்மை அடைய வழிவகை செய்துள்ளோம்.

தொலைநோக்குச் சிந்தனையும், வளமான திட்டமிடலும் கொண்ட அந்தத் திட்டங்களை அமைய இருக்கும் புதிய அரசு தொடர வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட விருப்பமாகும்.

மகளிர், இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள், விளிம்புநிலை மக்கள், அரசு ஊழியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்துத் திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்தினால் மக்களுக்கு நன்மைகள் தொடரும். மாநிலமும் வளரும். இதனைக் கவனத்தில் கொண்டு புதிய அரசு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைய இருக்கும் புதிய அரசுக்கு மீண்டும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாடு முழுவதும் த.வெ.கவினர் பட்டாசு வெடித்துக் கொண்டாட்டம்!



த.வெ.க. தலைவர் விஜய் முதல்வராகிறார் என்ற மகிழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதும் த.வெ.கவினர் பட்டாசு வெடித்துக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

விஜய்யின் பனையூர் அலுவலகம் தொடங்கி தமிழ்நாடு முழுவதும் இனிப்பு பரிமாறியும், பட்டாசு வெடித்தும் த.வெ.க தொண்டர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். பல இடங்களில் த.வெ.கவினர் ஆரவாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.





# விஜய் பதவியேற்பு விழாவில் கார்கே, ராகுல் காந்தி பங்கேற்பு

விஜய் முதல்வராக பதவியேற்கும் விழாவில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கின்றனர்.

தமிழ்நாட்டின் முதல்வராக தவெக தலைவர் விஜய் இன்று காலை 10 மணிக்கு பதவியேற்பார் என ஆளுநர் மாளிகை நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறும் பதவியேற்பு விழாவில் விஜய்க்கு தமிழக ஆளுநர் அர்லேகர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

விஜய்யுடன் சேர்ந்து 9 அமைச்சர்களும் இன்று பதவியேற்பார்கள் என த.வெ.க. வட்டாரங்கள் தெரிவித்தன. இதையடுத்து,சென்னைநேருஉள்விளையாட்டு அரங்கில் பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

இன்று விழா நடத்த வேண்டும் என்று விஜய் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஆட்சியமைக்க 118 பேரின் ஆதரவு தேவை என்ற நிலையில் 120 பேரின் ஆதரவு கிடைத்ததால் தமிழ்நாட்டின் முதல்வராகிறார் விஜய்.

# விஜய் உடன் சேர்ந்து 10 பேர் அமைச்சர்களாக பதவியேற்பு

## உத்தேச பட்டியல் வெளியானது







தமிழக முதல்வராக த.வெ.க. தலைவர் சி. ஜோசப் விஜய் பதவியேற்கும் விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறும் பதவியேற்பு விழாவில் விஜய்க்கு தமிழக ஆளுநர் அர்லேகர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

விஜய்யுடன் சேர்ந்து 10 அமைச்சர்களும் இன்று பதவியேற்பார்கள் என த.வெ.க வட்டாரங்கள் தெரிவித்தன.

விஜய் உடன் புஸ்சி அருண்ராஜ், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார் உள்பட 10 பேர் அமைச்சர்களாக பதவியேற்க உள்ளனர் என சொல்லப்படுகிறது

கூட்டணி கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கினாலும் கூட்டணி கட்சிகளும் அமைச்சரவையில் பங்கேற்க வேண்டும் என விஜய் விரும்புகிறார் என சொல்லப்படுகிறது.

உத்தேச பட்டியல் வருமாறு, ஜோசப் விஜய்: பொது நிர்வாகம், காவல் மற்றும் உள்துறை, கே.ஏ.செங்கோட்டையன்: பொதுப்பணித்துறை, என்.ஆனந்த்: நகராட்சி நிர்வாகத்துறை, வெங்கட்ரமணன்: பள்ளி கல்வித்துறை, ஆதவ் அர்ஜுனா: விளையாட்டு மற்றும் மது விலக்குதுறை, ராஜ்மோகன்: ஆதி திராவிடர் நலத்துறை, முஸ்தபா: சிறுபான்மை நலத்துறை, அருண் ராஜ்: பத்திரப்பதிவு மற்றும் வணிக வரித்துறை




# அமெரிக்கா - ஈரான் இடையே மீண்டும் இஸ்லாமாபாத்தில் அடுத்த வாரம் பேச்சு

அமெரிக்காவும் ஈரானும் அடுத்த வாரம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் மீண்டும் பேச்சில் ஈடுபட இருப்பதாக 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில்,

"அமெரிக்காவும் ஈரானும் ஒரு மாத காலம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. இதற்கான 14 அம்ச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்கும் பணியில் இரு தரப்பும் மத்தியஸ்தர்கள் மூலம் ஈடுபட்டு வருகிறார்கள். ஈரானின் அணுசக்தி திட்டம், ஹார்முஸ் ஜலசந்தியில் நிலவும் பதற்றத்தைக் குறைத்தல், ஈரானிடம் இருக்கும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை மற்றொரு நாட்டுக்கு மாற்றுவது உள்ளிட்ட அம்சங்களை அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அமெரிக்கா சேர்த்துள்ளது.

அதேபோல், அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்பது உள்ளிட்ட அம்சங்களை ஈரான் இணைத்துள்ளது. இது பேச்சுக்களின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தலாம் என பேசப்படுகிறது' என தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வர்ஜீனியாவில் நேற்று முன்தினம் இரவு செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்,

"மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள திட்டம் தொடர்பாக ஈரானிடம் இருந்து பதில் வரும் என்று எதிர்பார்க்கிறோம். இதற்கான செயல்முறையை ஈரான் வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறதா என்பது உறுதியாகத் தெரியவில்லை. விரைவில் தெரிந்துவிடும்." என தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ,

"ஈரான் அமைப்பு ரீதியாக மிகவும் பிளவுபட்டுள்ளது. அது செயலிழந்தும் உள்ளது. எனவே, அது ஒரு தடையாக இருக்கலாம். எனினும், ஈரானின் பதில் தீவிரமான பேச்சு செயல்முறைக்கு வழிவகுக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது" என தெரிவித்தார்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி ஈரான் மீது தாக்குதலை தொடங்கின. இதற்கு ஈரான் தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டது. இதையடுத்து பாகிஸ்தான் மேற்கொண்ட மத்தியஸ்தம் காரணமாக ஏப்ரல் 8 ஆம் திகதி போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஏப்ரல் 11 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் அமெரிக்கா - ஈரான் இடையே பேச்சு நடைபெற்றது. எனினும், இந்த பேச்சுவார்த்தையில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

இதன் பின்னர் போர் நிறுத்தத்தை டொனால்ட் ட்ரம்ப் திகதி குறிப்பிடாமல் நீட்டித்தார். அதேநேரத்தில், ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்க கடற்படை தொடர்ந்து முற்றுகையிட்டு வருகிறது.





# தெற்கு லெபனானில் 9 கிராமங்களின் மக்களை வெளியேற இஸ்ரேல் எச்சரிக்கை

லெபனானுடன் போர்நிறுத்தம் செய்யப்பட்ட நிலையில், ஹிஸ்புல்லாவுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதனால், தெற்கு லெபனானில் உள்ள 9 கிராமங்களில் வசிக்கும் மக்களை உடனடியாக வெளியேறுமாறு நேற்று இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

“பயங்கரவாத அமைப்பான ஹிஸ்புல்லா போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளதால், இஸ்ரேல் பாதுகாப்புப்படை அதற்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது” என்று இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் 9 கிராமங்களைப் பட்டியலிட்டு எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

அவரின் பதிவில், “உங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக உடனடியாக உங்கள் வீடுகளை விட்டு வெளியேறுங்கள். கிராமங்கள் மற்றும் நகரங்களிலிருந்து வெளியேறி திறந்தவெளிப் பகுதிகளுக்குக் குறைந்தது 1,000 மீற்றர் தூரத்தில் விலகி இருங்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் மாதம் முதலே போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் நிலையில், இஸ்ரேல் படைகளும் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பும் தெற்கு லெபனானில் நாள்தோறும் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு முன்னர் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 24 மணி நேரத்தில் ஹிஸ்புல்லா அமைப்பின் 85 இற்கும் மேற்பட்ட தளங்கள் மீது வான்வழி, தரைவழி தாக்குதல்கள் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியிருந்தது.

இஸ்ரேலின் தொடர் தாக்குதல்கள் காரணமாக அவர்கள் மீது ஏவுகணைகளையும் ஆளில்லா விமானங்களையும் ஏவி தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா இரு நாள்களுக்கு முன் தெரிவித்திருந்தனர். இதனைத்தொடர்ந்து, இஸ்ரேல் தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் சமீபத்தில் 11 பேர் கொல்லப்பட்டனர் என லெபனான் தெரிவித்திருந்தது.





# இன்றைய ராசி பலன்கள்- 10.05.2026




புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல்திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.

உங்களிடம் காணப்படும் மன திருப்தி மற்றும் மகிழ்ச்சி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று தேவையில்லாமல் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும். பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.பாதுகாப்பின்மை காரணமாக நீங்கள் தலை வலி பாதிப்பிறகு ஆளாகலாம் .




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள்.பேசுவதை தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது. எனவே கவனமாக பணத்தை கையாளவும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று கடினமான சூழ் நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்திற்காக சில தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில்பணிகளை மேற்கொள்ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமையாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திட ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.

பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் உங்கள் ஆரோக்கியத்திற்கு சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள்- 10.05.2026




இன்று சௌகரியங்களை அனுபவிக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மனவலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற் படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை மற்றும் உறுதி அவசியம். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் விழிப்புணர்வு தேவை.

பணியிடத்தில் மிதமான பலன்கள் காணப்படும். அதிகப் பணிகள் கவலையை அளிக்கும். அதனால் பணிகளைக் கையாளும்போது கவனக்குறைவு ஏற்படும்.

உங்கள் துணையுடன் குடும்பப் பிரச்சினை ஒன்றை சந்திக்க நேரலாம். குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்படலாம்.




சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டிருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

# மன்னாரில் இருந்து கணவருடன் மட்டக்களப்பிற்குப் புறப்பட்ட மகளையும்,பேரப்பிள்ளையையும் காணவில்லை என தாய் புகார்

## மருமகன் மட்டக்களப்பில் உள்ள அவரின் தாய் வீட்டிலல் உள்ளாராம்




Acknowledgement of Complaint

Police Station: அடம்பன்

Date: 08/05/2026

Name of Complainant

Nature of Complaint

I. B. Reference: CIB II 251/22

Signature of Recording Officer

Name, Rank & Reg. No. of Recording Officer

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

கணவருடன் சென்ற மகள் மற்றும் 10 மாதம் நிரம்பிய பேரப்பிள்ளை ஆகிய இருவரும் காணாமல் போயுள்ளனர் குறித்த பெண்ணின் தாய் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய மடு கிராமத்தைச் சேர்ந்த றெனோயன் றெ யாழினி (வயது 18) மற்றும் அவரது 10 மாத குழந்தை ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர் என அந்தப் பெண்ணின் தாய் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது மகளின் கணவர் தனது தாய்க்கு சுகயீனம் எனத் தெரிவித்து, கடந்த 2 ஆம் திகதி அவரது சொந்த இடமான மட்டக்களப்பிற்கு செல்கின்றார் எனக் கூறி மன்னாரில் இருந்து தனது மகளையும் பேரப் பிள்ளையையும் அழைத்துச் சென்றுள்ளார்.

மன்னாரில் இருந்து வவுனியா சென்று அங்கிருந்து மட்டக்களப்பிற்குச் செல்கின்றனர் எனக் கூறியுள்ளார். இந்த நிலையில் மகளும் பேரப் பிள்ளையும் காணாமல் போயுள்ளனர்.

எனினும் தனது மருமகன் மட்டக்களப்பில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்றுள்ள போதும் தனது மகளும் பேரப்பிள்ளையும் அங்கு செல்லாத நிலையில் காணாமல் போயுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

தனது மருமகன் மட்டக்களப்பில் உள்ள அவரது தாயார் வீட்டில் இருக்கின்றார் எனவும் தொலைபேசியில் முன்னுக்குப் பின் முரணான தகவல்களைத் தெரிவிக்கின்றார் ர்னவும் அவர் தெரிவித்தார்.

மகள் மற்றும் பேரப்பிள்ளை தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 07758 41705, 0776902536 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு

அல்லது பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்குமாறு தாயார் கோரிக்கை விடுத்துள்ளார்.